27.06.2025

DVC No.11/2022

எதிர் மனுதாரர் ஆஜர் இல்லை. அவர் சார்பாக வழக்கறிஞர் ஆஜர்.

ம.சா.1 கலைவாணி

**எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு திருமணம் ஆகும் போது எனது வயது 33 என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் எனது நிரூபண வாக்குமூலத்தில் 37 வயது என காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான் அது தட்டச்சு பிழையாகும். எனக்கு ஆதார் அடையாள அட்டை, ஓட்டுனர் உரிமம், வாக்காளர் அடையாள அட்டை, பாஸ்போர்ட், பான்கார்ட், வங்கி கணக்கு புத்தகம் எனக்கு உள்ளது. மேற்படி ஆவணங்கள் அனைத்தும் என்னுடைய பூனே முகவரியில் உள்ளது என்றால் அனைத்தும் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் மனுவில் தாக்கல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரில் தான் இல்லை என்றால் சரியல்ல. ஆதார் அடையாள அட்டை மற்றும் வாக்காளர் அடையாள அட்டை நான் சொன்ன முகவரியான கள்ளிக்குடி முகவரில் உள்ளது. என்னிடம் காண்பிக்கப்படும் ம.சா.ஆ.3 மகாராஷ்டிரா முகவரில் காண்பிக்கிறது என்றால் அது முன்பு உள்ளது. நான் பள்ளிபடிப்பை 11 ம் வகுப்பு வரை மகாராஷ்டிராவில் படித்தேன். 12 ம் வகுப்பு விருதுநகரில் படித்தேன். நான் கல்லூரி B.Pharmacy ஊட்டியில் படித்தேன். நான் M.Pharmacy பூனேயில் படித்தேன். நான் 2013 முதல் தற்போது வரை பெங்களூரிலும், பூனேயிலும் மாறி மாறி வேலை பார்த்தேன். எனக்கு தமிழ், தெலுங்கு, மராத்தி, இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகள் நன்கு தெரியுமா என்றால் எனக்கு ஆங்கிலமும், இந்தியும் நன்றாக வரும், தமிழ் புரியும், வாசிக்க தெரியாது. நான் வழக்கிற்காக தமிழ் வாசிக்க தெரியாது என்று சொன்னால் சரியல்ல. எனது அப்பா மத்தியரசு ஊழியர் என்றால் சரிதான். பூனேயில் தான் அங்கேயே ஓய்வு பெற்றார் என்றாலும் சரிதான். பூனேயில் எனது தகப்பனாருக்கு சொந்தமாக வீடு உள்ளதா என்றால் இருந்தது. ஆனால் தற்போது இல்லை. இரண்டு மாதங்களுக்கு முன்பாக அந்த வீட்டை என் தகப்பானார் விற்றுவிட்டார். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக என்னுடைய கணவர் 22.02.2022 ம் தேதி பெங்களூர் குடும்ப நல நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு MC.No.01/2022 என்ற வழக்கை தாக்கல் செய்தார் என்றால் தாக்கல் செய்தார். ஆனால் அது எனக்கு பின்னிட்டு நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பின்பு தான் அந்தவி வாகரத்து வழக்கு MC வழக்கு பற்றி எனக்கு தெரியும். மேற்படி விவாகரத்து வழக்கு தாக்கல் செய்த பின்பு தான் 2024 ம் வருடத்தில் தான் எதிர் மனுதாரர்கள் மீது DVC வழக்கையும் மற்றும் சேர்ந்து வாழ கோரி மனு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி பெங்களூரில் விவாகரத்து வழக்கை நான் மதுரை திருமங்கலத்திற்கு மாற்ற கோரி மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் TP No.2531/2022 மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் எதிர்மனுதாரர்களான அம்மா, அப்பாவை தவிர தங்கை மற்றும் அண்ணன்களுக்கு எனக்கு திருமணம் ஆவதற்கு முன்பே அவர்களுக்கு திருமணம் ஆகி குழந்தைகளுடன் இருந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி அண்ணன்கள் மற்றும் தங்கை தனி குடித்தனம் அப்போது இருந்தார்களா என்றால் இல்லை. ஆனால் அவர்கள் ஒரே கட்டிதத்தில் அடுத்தடுத்து இருந்தார்கள். கூட்டுக்குடும்பகமாக இருந்தார்கள். அவர்கள் கூட்டுக்குடும்பமாக இருந்தது இல்லை என்றாலும் இந்த வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. ((**கேள்விகள் மனுதாரரின் தனிப்பட்ட அந்தரங்கம் சார்ந்து என்பதால் In-Camera Proceedings எடுக்கப்பட்டது. )**

எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள விவகாரத்து மனுவை படித்து பார்த்துள்ளேன். திருமணம் நடந்த அன்று இரவு எங்களுக்குள் அறிமுகம் நடந்த போது நான் திருமணத்திற்கு முன்பு ராகேஷ் வர்மா என்ற கண்ணன் என்பவரோடு நட்புடன் இருந்தேன் என்று சொல்லியதன் விளைவாக எங்களுக்குள் பிரச்சனை ஆரம்பித்தது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி நாங்கள் நட்புறவில் இருப்பது என்னுடைய பெற்றோர்களுக்கு பிடிக்கவில்லை என்றாலும் அதனால் தான் எனக்கு திருமணம் நடைபெறுவதற்கு காலதாமதம் ஏற்பட்டது என்றாலும், எனது பெற்றோரின் அழுத்தத்தின் காரணமாக வேண்டாவெறுப்பாக திருமணம் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. அதனால் 1 ம் எதிர் மனுதாரர் மனவேதனைக்கு ஆளாகி இனிமேல் அப்படி ஒரு நட்பு வேண்டாம் என்று சொல்லி வாழ்க்கையை தொடங்கலாம் என்று சொல்லியபோது அதனை நான் கேட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதன் விளைவாகதான் எங்களுக்குள் குடும்ப உறவு எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் நான் சொன்னதை 1 ம் எதிர்மனுதாரர் கேட்கவில்லை என்ற காரணத்தினால் நான் தான் கொடுமை படுத்தினேன் என்றால் சரியல்ல. **(In Camera Proceedings முடிக்கப்பட்டது))** . நான் பணிபுரியும் பெண்ணாக இருப்பதால் எனக்கு தனிப்பட்ட முறையில் பாதிப்பு என்றாலும், பெற்றோர்களுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால் உடனடியாக சம்மந்தப்பட்ட காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நாங்கள் திருமணத்திற்கு பிறகு மொத்தமே 90 நாட்கள் வாழ்ந்தோம் என்றால் சரிதான். மேற்படி சொல்லப்படும் 90 நாட்களில் 04.10.2020 ம் தேதியும், 15.11.2020 தேதியும் எனக்கு ஏற்பட்ட இன்னல்களுக்கு, கொடுமைகளுக்கு நான் பெங்களூரில் வசித்த போது ஏதேனும் புகார் கொடுத்தேனா என்றால் புகார் கொடுக்கவில்லை. ஆனால் பின்பு பெண்கள் நல சங்கத்தில் கைப்பட எழுதி புகார் கொடுத்தேனா என்றால் நான் வாய்மொழியாகதான் சொன்னேன் என்றால் சரிதான். ஆனால் அவர்கள் எனது கணவருக்கு போன் செய்து பிரச்சனை முடிக்க முயற்சி செய்தார்கள். ஆனால் எந்த தேதியில் மேற்சொன்ன பெண்கள் நல சங்கத்திற்கு புகார் கொடுக்க போனேனா என்றால் பிப்ரவரி 2021 ம் ஆண்டு கொடுத்தேன். நான் தாக்கல் செய்துள்ள புகாரிலும், நிரூபணவாக்குமூலத்திலும் எனக்கும், எதிர்மனுதாரர்களுக்கும் இடையே 30.08.2020 ம் தேதி முதல் 27.11.2020 ம்தேதி வரை நடந்த சம்பவங்கள் அனைத்தும் பெங்களூரில் நான் திருமணமான புதுதில் எதிர்மனுதாரரோடு வாழ்ந்த காலங்களில் தான் நடந்தது என்று சொன்னால் சரிதான்.

எதிர்மனுதாரர் வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.